கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம்
1350
12 SEP 2022
சிதம்பரம்.

கண்காணிப்புப்பொறியாளர் அலுவலகம், நீவது.,
வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர்-1.
முன்னிலை:- பொறி.R.பாஸ்கர், பி.இ.,
கண்காணிப்புப்பொறியாளர், நீ.வ.து.,

**செயல்முறை ஆணை எண்: 201/ஆ2/2022/நாள்:.02.09.2022**

பொருள்:- பணியமைப்பு-பொபது - த.நா.அ.ப.தொகுதி- கருணை அடிப்படையில் பணிநியமனம் - திருமதி.த.கண்மணி, இளநிலை உதவியாளர் தபெ.காலஞ்சென்ற திரு.K.தனசேகரன் - கொள்ளிடம் வடிநில கோட்டம், நீ.வ.து., சிதம்பரம் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் - பணிவரன்முறை செய்து ஆணை வழங்கல் - சார்பு.

பார்வை:- 1)செயற்பொறியாளர், நீ.வ.து.. கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம் அவர்களின் கடித எண்.655/நி.எ.1/கோ.2/2022/ நாள்.08.07.2022.

2)இவ்வலுவலக கடித எண்.ஆ2/894/2021/நாள்.15.07.2022.

3) தலைமைப்பொறியாளர், நீ.வ.து., சென்னை மண்டலம், சென்னை அவர்களின் கடித எண்.இ1(1) /7543/2022/நாள்.10.08.2022.

4)அரசாணை (நிலை)எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு க்யூ-1/துறை/நாள்.26.02.2021.

5)இவ்வலுவலக கடித எண்.594/ஆ2/1131/2022/நாள்.24.08.2022.

6)செயற்பொறியாளர், நீ.வ.து.. கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம் அவர்களின் கடித எண்.655/நி.எ.1/கோ.2/2022/ நாள்.29.08.2022.

--------

ஆணை:-

உதவிசெயற்பொறியாளர், பொபது., சிறப்புதிட்ட உபகோட்டம்-3, திட்டக்குடி அலுவலகத்தில் உதவிசெயற்பொறியாளராக பணிபுரிந்து வந்த திரு.K.தனசேகரன் அவர்கள் 08.09.2009 அன்று காலமானதை தொடர்ந்து இவரது வாரிசு மகள் திருமதி.த.கண்மணி, என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டு 28.11.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். இவர் இப்பதவிக்குண்டான குறைந்தபட்ச கல்வித்தகுதி பெற்றுள்ளார் என்றும், இவரது பிறந்த தேதி.21.10.1989 ஆகும். இவர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது தகுதியினை பெற்றுள்ளார். திருமதி.த.கண்மணி, அவர்கள் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான கல்வி மற்றும் வயது தகுதிகளை பெற்றுள்ளார் என்றும், திருமதி.த.கண்மணி, அவர்களின் பணிவரன்முறைக்கு தேவைப்படுகின்ற அனைத்து ஆவணங்களையும் பார்வை எண்.1ல் காணும் செயற்பொறியாளர், நீ.வ.து., கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம் அவர்களின் கடித எண்ணின்படி இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைத்து, தனியர் தற்காலிக இவ்வட்ட பணியில் சேர்ந்த நாளான 28.11.2018 மு.ப முதல்

(த.பி.பா.)



Scanned with CamScanner

அப்பதவியில் பணிவரன்முறை செய்து தருமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். இதன்தொடர்ச்சியாக இக்கருத்துரு பார்வை எண்-2ல் காணும் இவ்வலுவலக கடித எண்ணின்படி தலைமைப்பொறியாளர், நீ.வ.து., சென்னை மண்டலம், சென்னை-5 அவர்களுக்கு பணிந்து அனுப்பிவைக்கப்பட்டது.

பார்வை எண்-3ல் காணும், தலைமைப்பொறியாளர், நீ.வ.து., சென்னை மண்டலம், சென்னை-5 அவர்களின் கடிதத்தில் பார்வை எண்.4-ல் காணும் அரசாணைக்கிணங்க இவரது பணிவரன்முறை சம்பந்தமான ஆணைகளை வட்ட அளவிலேயே வழங்க நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, பார்வை எண்-6ல் காணும் கடிதத்தில் இவருக்கு உரிய பணிவரன்முறை செய்து ஆணை வழங்கக்கோரி செயற்பொறியாளர், நீ.வ.து., கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம் அவர்கள் உரிய கருத்துருவை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

எனவே, மேற்கூறிய காரணங்களின் அடிப்படையிலும், அரசாணை எண்.48/ தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு/க்யூ.1/துறை/நாள்.26.02.2021-ல் வழங்கியுள்ள தெளிவுரைகளின் அடிப்படையிலும் திருமதி.த.கண்மணி, இளநிலை உதவியாளர் அவர்களின் பணியை அவர் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 28.11.2018 மு.ப. முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து இதன்மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

கண்காணிப்புப்பொறியாளர், நீ.வ.து.,சார்பில்
வெள்ளாறு வடிநில வட்டம், கடலூர்-1.

2/9/2022

பெறுநர்:-

திருமதி.த.கண்மணி,
இளநிலை உதவியாளர், நீ.வ.து.,
கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம்.

வழி:- செயற்பொறியாளர், நீ.வது., கொள்ளிடம் வடிநில கோட்டம், சிதம்பரம்.

செ. நி. செ. மு. ஆணை எண் : 1350/நி I/கோ.2/2022/நாள் 12.9.2.

"உரியவருக்கு" அனுப்பப்படுகிறது.

பெறுநர்:
திருமதி. த. கண்மணி.
இளநிலை உதவியாளர்.
கொள்ளிடம் வடிநில கோட்டம்
நீ.வ.து.,
சிதம்பரம்.

செயற்பொறியாளர், நீ.வ.து.
கொள்ளிடம் வடிநில கோட்டம்
சிதம்பரம்-608 001.

12/9/22

12/9/22

F:\ab\ADII\Proc. Tamil\Proc -2022.docx

Scanned with CamScanner